


# முன்னுரை



“தட்பவெப்பமாறுதல் மற்றும் மட்டுபடுத்துதல் குறித்து நாம் இன்று என்ன செய்கிறோமோ அதுவே நம்மை, நாம் யாரென்றும், நமது காலகட்ட வாழ்க்கை முறை மற்றும் உலக பாரம்பரியமாக அடையாளம் காணப்படும். ஏனெனில் இன்றைய தலைமுறையில், எதிர்காலத்தை நமது கைகளில் ஏந்திக்கொண்டிருக்கிறோம். அத்தகையதொறு எதிர்காலத்தில், நமது பேரக்குழந்தைகள் நம்மைகுறித்து, ”ஏன் நீங்கள் சரியன காரியங்கள் செய்யதறினீர்கள்? நீங்கள் செய்த மா பெறும் தவறினால் நாங்கள் இன்று அவதியான விளைவுகளை சந்திக்கிறோமே” என்று நம்மை கேட்கும் நிலை வரக்கூடாதென விரும்புகிறேன்.”

*திருமிகு. பான் கீ மூன்*
*பொது செயலர், ஐ.நா சபை*

**உலகில** உள்ள மக்கள் தொகையில் சரிபாதியுள்ள குழந்தைகள் தான் எதிலும் எப்பவும் எளிதில் பாதிக்கப்படக் கூடியவர்களாக உள்ளனர். ஏற்கனவே குழந்தை தொழிலாளர்கள், பள்ளிகளிலிருந்து புறக்கணிக்கப்பட்டவர் களாகவும், கடத்தப் படுபவர்களாகவும், பல்வேறு நோய்களுக்கு ஆளாகக்கூடியவர் களாகவும், எளிதில் பாதிப்புக்குள்ளாகும் பிரிவினராகவும் உள்ளனர். இந்தச் சூழலில் புவிவெப்பமடைதல் மற்றும் சுற்றுச்சூழல் சீரழிவு குறித்தும், அது பிற்காலத்தில் ஏற்படுத்தப் போகும் அபாயங்கள், பாதிப்புகள் குறித்தும் சுற்றுச்சூழல் அறிஞர்களும், சமூக விஞ்ஞானிகளும் அறிவுறுத்தி வருகின்றனர். இத்தகைய பாதிப்புகள் நேரிட்டால் அதில் பெரிதும் பாதிக்கப்படுபவர்கள் நாளைய தலைமுறையினரான இன்றைய குழந்தைகளாகவே இருப்பர்.

எனவே குழந்தைகளின் எதிர்கால நலன் மற்றும் அவர்களின் உரிமைகளை உறுதி செய்யும் நோக்கில் இந்தியாவின் ஏழு மாநிலங்களை சேர்ந்த 15000 க்கும் மேற்பட்ட குழந்தைகள் இணைந்து தட்பவெப்ப நீதிக்கான குழந்தைகள் இயக்கமாக செயல்பட்டு வருகின்றனர்.

நமது மூதாதையர்கள் விட்டுச்சென்ற இயற்கை வளங்களை (காடுகள், மலைகள், ஆறுகள், குளம் குட்டைகள், கடல், கடற்கரைகள்) பாதுகாக்க வேண்டிய அவசியம் உலகம் முழுவதற்கும் பொதுவானது, கட்டாயமானது என்று ஐ.நா. சபை சுட்டிக்காட்டியுள்ளது . மேலும் 2007-ஆம் ஆண்டு தட்பவெப்ப நீதிக்காக உலக நாடுகள் செய்ய வேண்டிய பணிகள் குறித்து எச்சரித்துள்ளது. அதன் அடிப்படையில் உலக நாடுகள் பலவும் இது குறித்த விழிப்புணர்வு மற்றும் செயல் திட்டங்கள் வகுத்து வருகின்றன. உலக அளவில் நடைபெற்ற ஆய்வுகள் பலவும் தட்பவெப்ப மாறுதலுக்கு காரணமான புவிவெப்பமடைதலை நிலையை ஊக்குவிக்கும் கரியமில வாயு வெளியிடுவதை உடனடியாக அனைத்து நாடுகளும் நிறுத்தினாலும் ஏற்கனவே ஏற்படுத்தபட்ட பாதிப்புகள் இன்னும் 10 ஆண்டுகளுக்கு மேல் நீடிக்குமென்று எச்சரிக்கிறது.

நாம் அனைவரும் அறிந்த வண்ணம் இன்றைய உலகமயமாதல் கொள்கையை ஒட்டிய விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்ப வளர்ச்சி வேகத்தில் கரியமில வாயுவை முழுமையாக தவிர்ப்பது என்பது சாத்தியமில்லாத ஒன்று. எனவே இத்தகைய சூழலில் இன்றைய மற்றும் பிறக்க போகும் குழந்தைகளின் எதிர்காலம் பெரிய கேள்விக் குறியாகவே இருக்கிறது.

இதனை தவிர்க்க அனைத்து தரப்பினரும் உலக அளவில் ஒன்றிணைந்து முழு வீச்சுடன் இந்த தாக்கங்களை தவிர்ப்பதற்கும், இதனால் ஏற்படும் விளைவுகளை எதிர்கொள்வதற்கும் நம்மை தயார்படுத்தி கொள்வது அவசியமாகிறது. பரவலாக தேசிய அளவில் பல்வேறு தரப்பினர் மற்றும் அரசால் மேற்கொள்ளப்பட்டு வரும் முனைப்புகள் பிரச்சனையின் வீரியத்தோடு ஒப்பிடும் போது மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது.

இத்தகைய பின்னணியில் குழந்தைகளின் குரலுக்கு முக்கியத்துவம் ஏற்படுத்தவும், எதிர்கால சந்ததியினருக்கு உகந்த உலகைப் படைப்பதில் தடையாக உள்ள தட்பவெப்ப மாறுதல் குறித்த விழிப்புணர்வை பலதரப்பு மக்களிடையேயும், குழந்தைகளுக்கு இந்த பிரச்சனையின் மீதும் அது அவர்கள் உரிமையின் மீது ஏற்படுத்தும் தாக்கம் குறித்து அரசாங்கத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையிலும் இந்த தேசிய அளவிலான சுற்றுச்சூழல் விழிப்புணர்வு யாத்திரை மேற்கொள்ளப்பட்டது.

தட்பவெப்ப நீதிக்கான குழந்தைகள் இயக்கம் 2009 ஆம் ஆண்டு முதல் தட்பவெப்ப நீதியும் குழந்தைகள் உரிமையே என்னும் பார்வையில் துவங்கப்பட்டு பல்வேறு சுற்றுச்சூழல் பாதுகாப்பு மாசு கட்டுப்பாடு, அரசு கவன ஈர்ப்பு மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணியில் செயல்பட்டு வருகிறது.

இந்த முனைப்பு RCPDS வளர்ச்சி பணி நிறுவனம், KNH இந்தியா மற்றும் ஜெர்மனியுடன் இணைந்து ஆரம்ப கட்டத்தில் விருதுநகர் மாவட்டத்தை சார்ந்த திருச்சுழி மற்றும் நரிக்குடி ஒன்றியங்களில் வளரிளம் குழந்தைகள் மத்தியில் ஆரம்பிக்கப்பட்டது. மூன்று ஆண்டுகள் வளர்ச்சியில் CMCJ இயக்கம் 7 மாநிலங்களில் 15,000 அங்கத்தினரோடு தேசிய இயக்கமாக செயல்படுவது குறிப்பிடதக்கது. இந்த வளர்ச்சியின் பின்னணியில் உறுதுணையாக இருந்த அனைத்து குழந்தை உரிமைசார் நிறுவனங்களின் பணியும் பாராட்டுக்குரியது. இந்த தேசிய யாத்திரையில் இதுகாரும் முரேர் மற்றும் பல வளர்ச்சி நிறுவனங்களோடு ஊஊகுஊ நிறுவனம் தன்னை இணைத்துக் கொண்டது CMCJ இயக்கத்தின் வளர்ச்சிக்கு பக்கபலமாக அமைந்துள்ளது.

## இதுவரை நடந்த செயல்பாடுகள் . . . ஒரு கண்ணோட்டம்

- சென்னையில் அக்டோபர் 2008-ல் "தட்பவெப்ப நீதிக்கான குழந்தைகளின் குரல்" மாநாட்டில் 1000 க்கும் மேற்பட்ட குழந்தைகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.
- அதை தொடர்ந்து தட்பவெப்ப நீதிக்காக மனித சங்கிலி போராட்டமும், துணி பேனரில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்டோர் கையெழுத்து இயக்கமும் நடைபெற்றது.
- அடுத்ததாக சென்னையில் நடைபெற்ற CMCJ இயக்கத்தின் பொதுக்குழு கூட்டத்தில் 42 உறுப்பினர்கள் பிரதிநிதிகள் அடங்கிய செயற்குழு உருவாக்கம் பெற்றது

- நவம்பர் 2009-ல் புதுதில்லியில் நடைபெற்ற பொதுவிசாரணை நிகழ்வில் CMCJ இயக்கத்தின் 15 பிரதிநிதிகள் கலந்துக் கொண்டார்கள்.
- டிசம்பர் 2009-ல் கோபன்ஹேகன், டென்மார்கில் நடைபெற்ற COP 15 உச்சி மாநாட்டில் இந்த 10,000 குழந்தைகள் கையொப்பம் இட்ட கையெழுத்து துணி பேனர் காட்சிப்படுத்தப்பட்டது.
- மே 2010-ல் விருதுநகர் மாவட்டத்தில் 8 ஒன்றியங்களில் 4000 குழந்தைகள் கலந்துக் கொண்ட சுற்றுச்சூழல் விழிப்புணர்வு மனித சங்கிலி மற்றும் பிரச்சாரம் நடத்தப்பட்டு, பின்னர் இயக்க பிரதிநிதிகள் விருதுநகர் மாவட்ட ஆட்சியரிடம் கோரிக்கை மனு கொடுக்கப்பட்டது.
- ஏப்ரல் 2009 முதல் திருச்சுழி ஒன்றியத்தில் உள்ள சங்கர் நகரில் CMCJ குழந்தைகள் நடத்தும் "இயற்கைசார் வேளாண் குழந்தைகள் கற்றல் மையம்" உணவுக்கு உத்திரவாதம் மற்றும் வாழ்க்கை கல்வி அடிப்படையில் செயல்பட்டு வருகிறது.
- தேசிய அளவிலான CMCJ இயக்கத்தின் முதலாவது செயற்குழு கூட்டம் 2011ல் கொடைக்கானலில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் தேசிய யாத்திரைக்கான முதல் விவாதம் முன்மொழியப்பட்டு தீர்மானமாக நிறைவேறியது.
- மறைந்து வரும் தாவரங்கள், சிறிய உயிர்வாழ் உயிரினங்கள் மற்றும் மூலிகைகள் குறித்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.
- பாரம்பரிய விதை திருவிழா விசாகப்பட்டணத்தில் நடத்தப்பட்டது.
- டிசம்பர் 2011 ம் ஆண்டு தானே புயலில் பாதிக்கப்பட்ட இயக்கத்தை சார்ந்த குழந்தைக்கு CMCJ இயக்க உறுப்பினர்கள் உதவிகள் அளித்தனர்.
- CMCJ இயக்க மூன்றாவது வருடாந்திர திட்டமிடல் கூட்டம் மதுரையில் RCPDS ல் நடைபெற்றது.
- தேசிய யாத்திரைக்கான முன்கட்ட நடவடிக்கைகள் (SPEECH மீடியா டிவிஷன், RCPDS நிறுவனம் , CCRD நிறுவனம் மற்றும் தேசிய ஒருங்கிணைப்பாளர் இணைந்து தயாரிக்கப்பட்ட கைபிரதிகள், ஸ்டிக்கர்ஸ், யாத்திரை பயணவழி தடம், பெற்றோர் மற்றும் குழந்தை உரிமை பாதுகாப்பு கமிட்டியின் ஒப்புதல், யாத்திரை வாகனங்கள் மற்றும் தனிநபர் காப்பீடு, போலீஸ் அனுமதி, யாத்திரை குழந்தைகளை வரவேற்கும் உள்ளூர் அமைப்புகள், இன்னபிற . . .) திருச்சுழியில் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு தீர்மானங்கள் இயற்றப்பட்டது.

## மலைவாழ் ஆதிவாசி மக்களின் வாழ்வாதர ஆய்வுக்கான நோக்கம்

தேசிய அளவில் ஒத்தவயதுடைய குழந்தைகளிடையே தட்பவெப்ப மாறுதல் எப்படி ஏற்படுகிறது. இது எந்த விதத்தில் குழந்தைகள் உரிமையை பாதிக்கும் மற்றும் இதற்காக குழந்தைகள் என்ன செய்யமுடியும் என்பதனை குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.

பல்வேறு பங்காளர்கள், அரசு மற்றும் அதிகாரிகளுக்கு சுற்றுச்சூழல் சீர்கேட்டினால் காடுகளில் ஏற்படும் பாதிப்பை வலியுறுத்தியும், மேலும் அதை மட்டுபடுத்துவதில் அனைவரின் பங்கு மற்றும் பொறுப்புகளை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல்

அரசின் கொள்கை வடிவமைப்பில் குழந்தைகள் உரிமை மற்றும் குழந்தைகள் கண்ணோட்டத்தை கருத்தில் கொள்ளவும் குழந்தைகளுக்கான சுற்றுச்சூழல் உரிமையை அமலாக்கம் செய்ய அரசை வலியுறுத்துதல்

இதை போன்று இயக்கத்தின் தொடர் செயல்பாடாக இந்த ஆண்டு காடுசார் சுற்றுச்சூழல் மண்டலம் அதை சார்ந்த ஆதிவாசி மக்களின் வாழ்வாதரம், பல்லயிர் பெருக்கம் சுழற்சி நிலை, உணவு சங்கிலி பாதிப்பு, ஆசிவாசி குழந்தைகளின் உரிமை நிலை ஆகியவற்றை கண்டறியும் நோக்கத்தோடு ஆய்வை விருதுநகர் மாவட்டத்தை சார்ந்த CMCJ பிரதிநிதிகளால் மேற்கொள்ள 2013 மே மாதம் 21 ம் தேதி முதல் 24 ம் தேதி வரை மேற்கு தொடர்ச்சி மலைகள் சந்திக்கும் இடமான நீலகிரி மாவட்டத்தில் கோத்தகிரி, மசினகுடி மற்றும் கூடலூர் பாகுதிகள் தேர்வு செய்யப்பட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது.

## முன்தயாரிப்பு பணிகள்:

விருதுநகர் மாவட்டத்தை சார்ந்த சிவகாசி, திருச்சுழி மற்றும் நரிக்குடி ஒன்றியங்களை சேர்ந்த CMCJ பிரதிநிதிகள் இந்த ஆண்டு மே மாதத்திற்கான செயல்பாடாக மலை சார்ந்த பகுதி மற்றும் ஆதிவாசிகளிடையே தட்பவெப்ப மாற்றத்தின் தாக்கத்தை குறித்த ஆய்வு மேற்கொள்வது என முடிவெடுதனர். அந்த முடிவின் அடிப்படையில் CMCJ பிரதிநிதிகள் அவர்களது கிராமங்களை சார்ந்த CMCJ உறுப்பினர்கள் மற்றும் CRPC கூட்டங்களில் தங்களது முடிவுகளையும், ஆய்வின் நோக்கங்களையும் தெரிவித்தனர். பின்னர் CRPC ஒப்புதலோடு ஆய்வில் கலந்துக் கொள்ளவதற்கான தகுதிகள் வரையரை செய்யப்பட்டது. அந்த தகுதிகளின் அடிப்படையில் CRPC ஒப்புதலோடு ஆய்வில் கலந்துக் கொள்ளும் குழந்தைகள் தேர்வு செய்யப்பட்டனர்.

தேர்வு செய்யப்பட்ட குழந்தைகளின் பிரதிநிதிகளுக்கு 16.05.2013 அன்று ஆய்வு குறித்த கலந்தாய்வு கூட்டம் RCPDS, திருச்சுழியில் நடைப்பெற்றது. அந்த கூட்டத்தில் மலைவாழ் பகுதியில் பல்லுயிர் சூழல், ஆதிவாசி மக்களின் வாழ்வாதாரம், காடு சார்ந்த உணவு நிலை, தட்பவெப்ப மாற்த்தினால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளின் காரணத்தை ஆய்வு செய்தல், மாற்றத்தை மட்டுப்படுத்துவதற்கான பரிந்துரைகள் ஆகியவற்றின் கீழ் ஆய்வுகளை PRA முறையில் மேற்கொள்வது என முடிவு செய்யப்பட்டது. அதற்கான மாதிரி ஆய்வினை குழந்தைகள் குழுக்களாக பிரிந்து குழு பயிற்சியாக செய்து அறிக்கையாக வாசித்தனர்.

மேலும் குழந்தைகளுக்கான தங்குமிடம், உணவு மற்றும் ஆதிவாசி கிராமங்கள் தேர்வு செய்து தாய்நிலை படுத்துவற்காக பணியாளர்கள் முன்பாகவே சென்று ஏற்பாடுகள் செய்த முன் தயாரிப்பு பணிகள் குறித்து தகவல்கள் தெரிவிக்கப்பட்டது.

# 01

# முதலாம் நாள்

## 21.05.2013

21.05.2013 அன்று இரவு 33 குழந்தைகள், CRPC உறுப்பினர் 1 நபர், மற்றும் RCPDS பணியாளர்கள் 5 பேருக்கு அலுவலகத்தில் இரவு 7.00 அளவில் பயண விபரம் குறித்த கூட்டம் நடத்தப்பட்டது. அப்போது குழந்தைகளுக்கு பயண உபகரணங்கள் கொடுக்கப்பட்டது.

ஆய்வு பயணத்திற்கான குழந்தைகள் அனைவரும் 21.05.2013 இரவு RCPDS கேத்தநாயக்கன்பட்டிக்கு வருகை தந்தனர். அங்கு குழந்தைகளுக்கு ஆய்வுக்கான நோக்கம், எப்படி ஆய்வை மேற்கொள்ள வேண்டும் என்பதை குறித்த கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் முனைவர். ஜான் தேவவரம், ஸ்பீச் திட்ட இயக்குனர். திரு. எர்ஸ்கின், KNH இந்தியாவின் திரு. டிசில்வா ஆகியோர் வழிநடத்தினர். முனைவர். ஜான் தேவவரம் அவர்கள் ஆய்விற்கான நோக்கம் குறத்தும், அதனை மேற்கொள்ள வேண்டிய முறைகளையும் விளக்கினார். அதேபோல் திரு. எர்ஸ்கின் அவர்களும் குழந்தைகளுக்கு ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் வழங்கிளார். பிறகு குழந்தைகள் அனைவரும் 21.05.2013 அன்று இரவு RCPDS அலுவலகத்திலேயே தங்கினார்கள்.

21.05.2013 அன்று மாலை 4 மணிக்கு குழந்தைகள் அனைவரையும் ஆலங்குளம் SPEECH அலுவலகத்திற்க வரவழைக்கப்பட்டனர். பிறகு திட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் ஆய்வு பயணத்தில் கலற்துக் கொள்ளும் பணியாளர்கள் குழந்தைகளக்கு பயணத்தின் போது குழந்தைகள் கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகளை எடுத்துக் கூறினர். மேலும் குழந்தைகள் எங்கு இந்த ஆய்வு மேற்கொள்ள படுகிறது என்ற தகவலும் தெரிவிக்கப்பட்டது. அதாவது ஆய்வு மேற்கொள்ளும் பகுதியானது நீலகிரி மாவட்டத்தில் உள்ள மசினகுடி கிரமத்திற்கு அருகில் உள்ள செம்பநத்தம் மற்றும் தெப்பகாடு என்ற மலைவாழ் மக்கள் வசிக்கும் கிராமங்களில் ஆய்வு மேற் கொள்ள இருப்பதாக கூறப்பட்டது. பிறகு அவர்களுக்கு இந்த ஆய்விற்கான நோக்கம் விளக்கப்பட்டது. இந"த ஆய்வவில் மலைப்பகுதியில் உள்ள வனசூழல், மலைவாழ் மக்களின் முந்தைய கால வாழ்கைமுறை, தற்போதைய அவர்களது வாழ்க்கைமுறை மற்றும் முந்தைய தற்போதைய வாழ்வாதாரங்களை குறித்த தகவல்களையும், மறைந்து போன வளஆதாரங்கள் குறித்த தகவல்களை சேகரிக்க வேண்டும் என்றும், தட்பவெப்ப மாற்றம் அவர்களது வாழ்வியலில் மற்றும் வாழ்வாதரத்தில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியள்ளது என்றும் ஆய்வு மேற் கொள்ள வேண்டும் என்றும், அதன் தீர்வாகன பரிற்துரைகளை கண்டறிய வேண்டும் என எடுத்துரைக்கப்பட்டது.

அதன் பின் குழந்தைகள் இரண்டு குழுக்களாக பிரிக்கப்பட்டு 2 வேன்களில் தங்களது பயணத்தை தொடங்கிளர். ஆலங்குளம் அலுவலகத்திலிருந்து புறப்பட்டு இரவு 9 மணி அளவில் மதுரையில் உள்ள RCPDS நிறுவன Trianing Centre க்கு சென்று இரவு தங்கினர்.

02

# இரண்டாம் நாள்

## 22.05.2013

22.05.2013 அன்று காலை 6.30 மணிக்கு பயணம் ஆரம்பமானது. திருச்சுழியிலிருந்து கிளம்பிய குழந்தைகளுக்கு காலை உணவு வாடிப்பட்டி அருகில் வழங்கப்பட்டது. அதன்பின் தொடர்ந்த பயணம் மதியம் 1.00 மணியளவில் மேட்டுப்பாளையம் வந்ததைடைந்து. அங்கு குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது. பிறகு அங்கிருந்து ஆய்வு பயணமானது தொடங்கியது. மாலை 4.30 மணியளவில் RCPDS CMCJ குழந்தைகள் கோத்தகிரியில் உள்ள ஐ லேண்ட் டிரஸ்ட் சென்றடைந்தனர். அன்று மாலையே குழந்தைகளுக்கு ஒரு விளக்க கூட்டம் நடைப்பெற்றது. கூட்டம் முடிந்ததும் குழந்தைகளுக்கு இரவு உணவு அளிக்கப்பட்டது.

22.05.2013 காலை 6.30 மணியளவிற்கு குழந்தைகள் அனைவரும் ஊட்டிக்கு பயணமானார்கள். மாலை 4.30 மணிக்கு மேட்டுபாளைத்தை அடைந்தனர். பிறகு அங்கிருந்து கிளம்பிய பயணமானது இரவு 9.00 அளவிற்கு தேவாலா என்ற கிராமத்திற்கு சென்றடைந்தது. அங்கு இரவு குழந்தைகள் தங்கினார்கள்.

22.05.2013 காலை 6.30 மணியளவிற்கு குழந்தைகள் அனைவரும் ஊட்டிக்கு பயணமானார்கள். மாலை 4.30 மணிக்கு மேட்டுபாளைத்தை அடைந்தனர். பிறகு அங்கிருந்து கிளம்பிய பயணமானது இரவு 9.00 அளவிற்கு தேவாலா என்ற கிராமத்திற்கு சென்றடைந்தது. அங்கு இரவு குழந்தைகள் தங்கினார்கள்.

03

# மூன்றாம் நாள்

## 23.05.2012

நாள் : 23.05.2013

காலை 9.30 மணிக்கு CMCJ பிரதிநிதிகள் ஐலேண்ட் டிரஸ்டிலிருந்து புறப்பட்டு ஆய்வு மேற்கொள்ளவிருக்கும் ஆதிவாவசி கிராமமான கோத்தகிரி முக்கு என்ற கிராமத்திற்கு புறப்பட்டனர். இங்கு வாழும் ஆதிவாசிகள் இருளர் இனத்தை சார்ந்த மக்கள் ஆவர்.

**ஆய்வின் போது**

நீலகிரி மாவட்டத்தில் பல நூறு ஆண்டுகளுக்கு முன் ஆதிவாசிகள் மட்டுமே வாழ்ந்து வந்துள்ளனர். இவர்கள் அனைவரும் காடுகளை சார்ந்த வாழ்வியலையும், விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பையும் அவர்களது வாழ்வாதாரமாக கொண்டிருந்தனர். இந்த சூழலலில் கர்நாடகவை சார்ந்த படுகர் இன மக்கள் நீலகிரியின் பல பகுதிகளுக்கு குடியேறி காடுகளை தங்கள் கட்டுபாட்டுக்கு கெதண்டு வந்தனர். இந்த காடுகனை அழித்து தேயிலை, காப்பி போன்றவந்றை பயிர் செய்கின்றனர்.

அதன் பிறகு 1964 ஆம் ஆண்டில் இலங்கை இந்திய ஒப்பந்தின் அடிப்படையில் 5 லட்சம் இலங்கை தமிழர்கள்தாய்நாடு திரும்பினார்கள். அவர்களில் 2 லட்சம் இலங்கை தமிழர்கள் நீலகிரி மாவட்டத்தில் குடியமர்த்தப்பட்டனர். இவர்களின் வாழ்வாதாரத்திற்காக ஏறதாழ 6000 ஏக்கர் காடுகள் அழிக்கப்பட்டு தேயிலை மற்றும் காப்பி தோட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. இதனால் காடுகளையே வாழ்வாதாரமாக கொண்ட ஆதிவாசிகள் இன்று தேயிலை மற்றும் காப்பி தோடங்களில் கூலி வேலை செய்யும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

ஆய்வு சென்ற கோத்தகிரிமுக்கு என்ற கிராமம் கோத்தகிரியிலிருந்து 23 கி.மீ. தொலைவில் உள்ளது. இங்கு கோத்தர் என்ற ஆதிவாசி மக்கள் வாழ்ந்து வசித்து வந்ததால் கோத்தகிரிமுக்கு என்று அழைக்கப்படுகிறது. இந்த பகுதியில் தேயிலை மற்றும் காப்பி தோட்டங்களும் உருவாக்க முங்பட்டதால் கோத்தர் இனத்து மக்கள் அங்கிருந்து புலம் பெயர்ந்தனர். தற்போது அருகாமை கிராமத்து இருளர் இன மக்கள் இங்கு குடியேறி உள்ளனர். இந்த கிராமம் தோன்றி ஏறக்குறைய 20 ஆண்டுகளுக்கு மேலாகிறது.

இருளர் இனமக்கள் இங்குள்ள காடுகளில் விவசாயத்தை அடிப்படையான தொழிகளை செய்து வந்துள்ளனர். இவர்கள் கூட்டான விவசாயத்தையே செய்து வந்துள்ளனர். விவசாயத்தில் கிடைக்கும் லாபத்தை அனைவரும் பங்கு பிரித்துக் கொண்டார்கள். இவர்கள் செய்த விவசாயத்தில் தினை, கேப்பை, சாமை போன்ற தானியங்கள் முக்கிய பங்குவகித்தன. தற்போது காடுகள் அழிக்கப்பட்டு அரசு மற்றும் தனியார் வசம் உள்ளதால் விவசாயம் முழுமையாக மறைந்து, தேயிலை மற்றும் காப்பி தோட்டங்களில் கூலி வேலை செய்து வருகிறார்கள். ஆண்கள் பெரும்பாலும் மரம் வெட்டுதல் மற்றும் கட்டிட வேலைகளுக்கு செல்கிறார்கள். காடுகளில் சுயசார்புடன் இருந்த இருளர் இன ஆதிவாசிகள் இன்று அடுத்தவர்களை சார்ந்து வாழும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்..

இவர்களது வசிப்பிடமானது முந்தைய காலங்களில் காடுகளில் இருந்து கிடைக்க கூடிய புல், மூங்கில், தாவர நார்களை கொண்டு இயற்கை சூழலுடன் கூடிய வீடுகளை அமைத்து வாந்து வந்துள்ளனர். தற்சமயம் காடுகள் அழிக்கப்பட்டதாலும், வனத்துறையின் கட்டுப்பாட்டாலும் காடுகலிருந்து வீடுகட்டுவதற்கு தேவையான பொருட்கள் கிடைக்காத நிலையில் செங்கள், சிமெண்ட் கொண்ட ஓட்டு வீடுகளை கட்டி வாழ்ந்து வருகின்றனர். பெரும்பாலான வீடுகள் அரசங்கத்தாலும், தொண்டு நிறுவனங்களாலும் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.

கோத்தமுக்கு கிராம ஆதிவாசிகளில் உணவு பழக்கவழக்கமானது முந்தைய காலங்களில் தாங்கள் விவசாயம் செய்த சாமை, கேப்பை, தினை போன்ற சிறுதாளிய பயிர்கயையும், மேலும் காடுகளில் கிடைக்க கூடிய கிழங்கு வகைகள், பழங்கள், கீரைகளையும், காட்டு விலங்குகளை வேட்டையாடி அதன் மாமிசங்களையும் உணவாக உட்கொண்டு வாழ்ந்து வந்தனர். ஆனால் தற்சமயம் விவசாயம் மறைந்து விட்ட காரணத்தாலும், காட்டுக்குள் செல்வதற்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பட்டினாலும் தங்கள் கிராமங்களில் அரசால் நடத்தப்படும் நியவிலை கடையில் கிடைக்க கூடிய இலவச அரிசியே அவர்களது பிரதான உணவாக மாறியுள்ளது. மேலும் மற்ற உணவுப் பொருட்கள் வாங்க வேண்டும் என்றாலும் சேமலூர்மட்டம் என்ற கிராமத்திற்கு 8 கி.மீ. சென்று வாங்க வேண்டிய சூழ்நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

முந்தைய காலங்களில் ஆதிவாசி மக்களின் வாழ்கையானது காடுகளை சார்ந்தே அமைந்து இருந்து. காடுகளிலிருந்து தங்களுக்கு தேவையான விறகு, வீடுகட்டுவதற்கான புல், மூங்கில், சீமாப்புல், பழங்கள், சந்தனமரம், ஈட்டிமரம், நெல்லி, நாவல் போன்ற பொருட்களையும், உணவுக்கு தேவையான காட்டுகிழங்கு, கீரை வகைகளையும், மருத்துவத்திற்கு தேவைபடும் மூலிகையான கடுக்காய், சீகக்காய், பூச்சகாய், காலி வேர், போன்றவற்றை பயன்படுத்திவந்தனர். மேலும் காடுகளுக்குள் சென்று தேன் எடுத்து வியபாரம் செய்து வந்தனர். அப்போது காடுகளில் வனவிலங்குகளான கரடி, குரங்கு, யானை, காட்டெருமை, காட்டு கோழி, மாலைபாம்ர், முயல், சருகுமான், சிறுத்தை, காட்டு மாடு இருந்துள்ளது.

தற்போது இந்த பகுதி வனத்துறையினரால் பாதுகாக்கப்பட்ட காடாக அறிவிக்கப்பட்டதால் வனத்திலிருந்து கிடைக்க கூடிய எந்த பொருளும் ஆதிவாசி மக்களுக்கு கிடைப்பது இல்லை. மேலும் வனத்துறைக்கு அப்பாற்பட்ட காடுகள் எல்லாம் தனிநபர்களால் காடுகள் அழிக்கப்பட்டு தேயிலை மற்றும் காபி தோட்டங்களாக மாற்றப்பட்டதால் வனவிலங்குகள் காட்டைவிட்டு கிராமங்களுக்குள் வந்து இரை தேடுவது அதிகமாகிவிட்டது.

அன்றய கால ஆதிவாசிமக்கள் படிப்பறிவு என்பது இல்லாமல் இருந்தது. மேலும் அதைப்பற்றிய வழிப்பணர்வும் அவர்களுக்கு கிடையாது. 2005 ஆண்டு வரைக்கூட அவர்களது கல்வி நிலை 3 சதவீதமாகதான் இருந்துள்ளது. ஆனால் தற்போது அனைத்து குழந்தைகளுமே பள்ளிக்கு செல்கின்றனர். பேரும்பாலான குழந்தைகள் 10 வகுப்பு வரை படித்துள்ளனர். 4 குழந்தைகள் கல்லூரி வரை சென்று பட்டப்படிப்பு முடித்துள்ளனர். அதில் ஒரு பெண் கோயம்பத்தூரில் தனியார் கல்லூாயில் பேராசிரியராக பணிப்புரிந்து வருகிறார்.

**மறைந்து போன ஆதாரங்கள்**

- புல் மற்றும் மூங்கிலால் ஆன பாரம்பரிய வீடுகள் மறைந்து ஓடு மற்றும் கான்கிரீட்டாலான வீடுகள்
- சிறுதானியங்களான சாமை, கேப்பை, தினை போன்ற தானியங்கள் மறைந்து போனது
- ஆடு, மாடுகள் போன்ற கால்நடைகள் குறைந்து போனது.
- வனத்தில் கிடைக்க கூடிய கிழங்கு வகைகள், மூலிகைகள் மற்றும் வனப் பொருட்கள் மறைந்து போனது.
- வன விலங்குகளின் எண்ணிக்கை காணிசமாக குறைந்து போனது.
- பாரம்பரிய ஆதிவாசிகள் நடனம், இசைக்கருவிகள் மறைந்து போனது.
- நீலகிரி மாவட்டத்தில் மட்டும் 132 நீரோடைகள் மறைந்து போயின

**பாதுகாக்கப்பட்ட வனம் - பயணம்:**

24.05.2013 அன்று கோத்தகிரிக்கு அருகில் உள்ள கேர்பெட்டா என்ற கிராமத்தில் உள்ள பாதுகாக்கப்பட்ட வனப்பகுதிக்கு சென்று பார்வையிடப்பட்டது. நீலகிரி மாவட்டம் தென்இந்தியாவின் நீர் தொட்டி என்று அழைக்கப்படுகிறது. காவேரி ஆற்றிற்கு 6 ல் 1 பங்கு தண்ணீர் நீலகிரி மலையிலிருந்து தான் செல்கிறது. காடுகளில் பல்லுயிர் பெருக்கம் பற்றி அறிந்து கொண்டோம். 300 வகையான பறவைகள் இங்கு உள்ளது. மேலும் சப்பு நிலக்காடுகள் உள்ளது.

23.05.2013 அன்று காலை ஆய்வு மேற்கொள்ளும் ஆசிவாசி கிராமமான மாங்காவயல் என்ற கிராமத்திற்கு ஆய்வு குழுவானது சென்றடைந்தது. அங்கு பணியர் இனத்து மலைவாழ்மக்கள் வாழ்கின்றனர். இந்த கிராமத்திற்கு திருச்சுழி ஸ்பீச்யை சார்ந்த ஊஆஊது பிரதிநிதிகள் 20 பேர் மற்றும் வழிநடத்தும் பணியாளர்கள் 3 பேர் இந்த கிராமத்தில் ஆய்வை மேற்கொண்டனர்.

ஆய்வின் முதல் கட்டமாக கிராம மக்கள் ஊரைப்பற்றிய ீசுயு வரைப்படத்தை வரைந்தனர். அதில் ஊரில் உள்ள 23 வீடுகள் மற்றும் அங்கு வசிக்கும் 65 நபர்களை குறித்தார்கள். அதன் பிறகு உரையாடல் மூலமாக ஆய்வுக்கு தேவையான தகவல்கள் ஆதிவாசி மக்களிடமிருந்து பெறப்பட்டது. அவை

- தற்போது கிராம மக்கள் தேயிலை தோட்டம் அமைத்து தேயிலை பயிர் செய்து வருகிறார்கள்
- 15 நாட்களுக்கு ஒருமுறை தேயிலை பறிபப்பதாகவும், மழை நன்றாக இருந்தால் 3 முறை பறிப்பதாகவும் அறியப்பட்டது.
- இங்கு மக்களுக்கு வழிகாட்டியாக ஊவுசுனு என்ற தொண்டு நிறுவனம் செயல்படுவதாக அறியப்பட்டது.
- இங்கு 25 ஆதரவற்ற குழந்தைகளும், 15 முதியவர்களும் இருப்பதாக தகவல் சேகரிக்கப்பட்டது.
- ஊவுசுனு நிறுவனம் கிராம மக்களின் முன்னேற்றத்திற்காக வீடுகட்டுவதற்கான நிதியுதவி, மாடு வளர்ப்பதற்கான கடன் உதவி போன்ற உதவிகளை செய்துள்ளது தெரியவந்தது.

பிறகு CTRD யை சார்ந்த திருமிகு. விஜய் அவர்கள் ஆய்வு மேற்கொள்ள வந்திருந்த குழந்தைகளை வரவேற்று பேசினார். பிறகு குழந்தைகள் அனைவரும் சுய அறிமுகம் செய்துக் கொள்ளப்பட்டது.

நீலகிரிக்கான பெயர் காரணம் கூறப்பட்டது. நீலம் என்றால் மலை தூரத்திலிருந்து பார்ப்பதற்கு நீலநிறமாக தெரிவதாலும், கிரி என்றால் மலை என்று அர்த்தம் இவை இரண்டும் இணைந்து நீலகிரி என்று அழைக்கபடுவதாக கூறப்பட்டது. இந்த நீலகிரி மாவட்டத்தில் பண்டைய ஆதிவாசிகள் மற்றும் மலைவாழ் பழங்குடியினர் வசித்து வருகின்றனர். அப்போதைய பழங்குடியினர் காடுகளில் கிடைக்கும் பொருட்களையும் மற்றும் வலங்குகளை வேட்டையாடியும் தங்களது வாழ்வாதாரமாக கொண்டு வாழ்ந்து வந்தனர்.

இந்தியாவில் மொத்தம் 75 பண்டைய பழங்குடியினர் உள்ளனர். அதிலும் குறிப்பாக 6 பண்டைய பழங்குடியினர் இருக்கிறார்கள், அவர்கள் அனைவரும் நீலகிரி மாவட்ட மலைப்பகுதிகளிலேயே இருப்பது ஒரு தனி சிறப்பு.

நீலகிரி மாவட்டம் 6 தாலுக்காகளை கொண்டுள்ளது. அவை பந்தலூர், கூடலூர், ஊட்டி (உதகை), கோத்தகிரி, குன்னூர், குந்தா ஆகியவையாகும். நீலகிரி மாட்டம் மலைபிரதேசமானதால் இற்கு அடந்த காடுகள், இயற்கை வளங்கள், 100க்கும் மேற்பட்ட விலங்கு இனங்கள், 350 மேற்பட்ட பறவையினங்கள் மற்றும் 1000க்கும் மேற்பட்ட மர வகைகள் காணப்படுகின்றன. உலக அளவில் அடந்த காட்டுபகுதிகளான 10 Biosphere ல் நீலகிரி மாவட்டமும் ஒன்று. இங்கு விலங்குகளை பாதுகாக்க பண்டிப்பூர், சத்தியமங்களம், முதுமலை பகுதிகளில் விலங்குகள் சரணலாயம் அமைக்கப்பட்டு காடுகளும் விலங்குகளும் பாதுகாக்கப்பட்டு வருகிறது. இந்த இடத்திற்கு 2011 ஆம் ஆண்டு UNESCO அமைப்பின் அங்கிகாரம் கிடைக்கப் பெற்றது.

தற்பேர்து இங்கு வாழும் மக்கள் தேயிலை, காபி மற்றும் பழத் மரங்களை பயிரிட்டு வருமானம் பெறுகிறார்கள். இங்குள்ள தோட்டங்களில் இலங்கை தமிழர்கள் மற்றும் கேரளா மக்கள் மலைகளில் தஞ்சம் புகுந்து தோட்ட வேலை செய்து வருகின்றனர். தற்போது மலைவாழ் மக்கள் தங்களது குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பி படிக்க வைக்கின்றனர்.

இங்குள்ள மக்கள் தொண்டு நிறுவனத்தின் மூலம் அமைத்துக் கொடுக்கப்பட்ட சாணஎரிவாயு அடுப்பை தங்களது சமையலுக்கு பயன்படுத்துகின்றனர். இதன் மூலம் நாள் ஒன்றுக்கு தேவைப்படும் 30கிலோ விறகு மிச்சப்படுத்தபடுகிறது. மேலும் மாதத்திற்கு தேவையான 900 கிலோ விறகு எரிப்பது தடுக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலம் புகையினால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதுகாப்படுகிறது. மேலும் புகையினால் ஏற்படும் கண் எரிச்சல், மற்றும் சுவாச கோளறு நோய்கள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

காடுகளிலிருந்து சேகரிக்கப்படும் மூலிகைகள் வீட்டு உபயோகம் மற்றும் வியாபரமாகவும் பயன்படுத்துகின்றனர். தற்போது 75 சதவீகித மூலிகைகள் அழந்து விட்டாத தெரிவிக்கின்றனர். கிடைக்க கூடிய ஒருசில மூலிகைகளை கொண்டே தற்போது வைத்தியம் செய்து வருகின்றனர்.

இவர்களது வீடு மணல் தரையாகவும், அதை சாணம் கொண்டும் பீசியிருப்பார்கள். வீட்டின் பக்கவாட்டு சுவர்கள் மூங்கில் கொண்டு அடுக்கி தை மணல் கொண்டு பூச்சியிருப்பார்கள். வீட்டின் கூரையானது காய்ந்த புற்களை கொண்டு வேயப்பட்டிருக்கும். இப்படியாக இயற்கை முறைப்படி கட்டப்படிருக்கும் வீடுகளில் வாழ்ந்து வந்தனர். இவர்கள் வீடுகளை வருடத்திற்கு இருமுறை அதாவது மழைகாலத்திற்கு முன்னும், வெயில் காலத்திலும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்கின்றனர். இங்கு பெரும்பாலும் 6 மாதத்திற்கு தொடர்ந்து மழைப்பெய்ய வாய்ப்பிருப்பதால் மழைகாலத்திற்கு முன்பாக வீடுகளை பரமாரிப்பு பணிகளை மேற்கொள்கின்றனர்.

23.05.2013 அன்று காலை 8 மணிக்கு குழந்தைகள் அனைவரும் காலை உணவை முடித்துவிட்டு ஆய்வு பயணத்திற்கு தயாரானார்கள். அப்போது கிரேஸ் தொண்டு நிறுவனத்தின் நிறுவனர் திரு. சாலோமன் அவர்களை திரு. ஸ்டீபன் அவர்கள் அறிமுகம் செய்து வைத்தார். பிறகு திரு.சலமோன் அவர்கள் குழந்தைகளிடம் அவரது நிறுவனம் மலைவாழ் மக்களிடம் பணிபுரிவதையும், அவர்களது குழந்தைகளுக்கு கல்வி உதவி செய்வதையும் தெரிவித்தார். மேலும் அவர் ஆய்வு மேற்கொள்ள இருக்கும் மலைவாழ் மக்களின் கிரமத்தை பற்றியும், அவர்களது மொழி, கலசாரத்தை பற்றியும் விளக்கம் அளித்தார். ஆய்வு மேற்கொள்ளும் போது குழந்தைகள் அவர்களிடம் எவ்வாறாக பேச வேண்டும், அவர்களிடம் எப்படி அணுகி தகவல்கனை சேகரிக்க வேண்டும் என்ற தகவலும் அவர் கொடுத்தார். மேலும் ஆய்வுக்கு செல்லும் இரு கிராமங்களும் வேவ்வேறு இன மக்கள் என்றும் வேவ்வேறு மொழிகளை பேச கூடியவர்கள் என்றும் கூறினார்.

அவரது அறிமுகத்திற்கு பிறகு குழந்தைகள் இரு குழுக்களாக பிரிக்கப்பட்டனர். ஒரு குழு குழந்தைகள் செம்பநத்ததிற்கும், மற்றொரு குழு குழந்தைகள் தெப்பகாடுக்கும் சென்றனர்.

செம்பநத்தம்

குழந்தைகளில் ஒரு குழுவானது செம்பநத்தம் கிராமத்தை அடைந்தனர். அங்கு சென்ற குழந்தைகள் முதலில் அந்த கிராமத்தை சுற்றி வந்தனர். அப்போதே சிறுசிறு குழுக்களாக பிரிந்து அங்குள்ள குழந்தைகள், பெண்கள்,

முதியவர்கள் ஆகியவர்களுடன் தங்களை அறிமுகம் செய்துக் கொண்டு கிராமத்தை பற்றிய தகவல்களை கேட்டு அறிந்துக் கொண்டனர். அங்குள்ள குழந்தைகளுடன் நட்புடன் பேசி தங்களையும் அறிமுகம் செய்துக்கொண்டனர். பிறகு அங்குள்ள குழந்தைகள் மையத்தில் அந்த கிராம முக்கியஸ்தர்கள், பெண்கள், குழந்தைகள், பெரியவர்கள் இந்த ஆய்வு குறிதது பேச சவந்திருந்தனர். ஆய்வானது ீசுயு முறையில் நடத்தப்பட்டது. முதலில் வந்திருந்த கிராம மக்களிடம் ஊஆஊது குழந்தைகள் தங்களை பற்றி அறிமுகம் செய்து கொண்டதுடன் சுயஅறிமுகமும் செய்துக் கொண்டனர். அந்த கிராம மக்களும் தங்களை பற்றி அறிமுகம் செய்துக் கொண்டனர். அப்போது அவர்கள் தாங்கள் இருளர் இனத்தை சேர்ந்தவர்கள் என்றும் அவர்களது மொழி அருளர் மொழி என்றும் மேலும் அவர்கள் தமிழ் மற்றும் கன்னடம் நன்றாக பேசுவார்கள் என்றும் தெரிவித்தனர்.

பிறகு ஆய்வு பணிகளை ஊஆஊது குழந்தைகள் மேற் கொண்டனர். குறிப்பாக பெரியவர்களிடம் முந்தைய காலங்களில் அவர்களது வாழ்வாதாரம், வாழ்கை முறை மற்றும் அப்போது அவர்களுக்கு காடுகளிடமிருந்து கிடைத்த வளங்களை குறித்து கேட்டனர் அவர்களது பதிலுக்கு ஏற்ப கோலமாவு கொண்டு வரையப்பட்டு ஆய்வுகளை தொடர்ந்தனர்.

அப்போது கிடைத்த தகவலின்படி

**தற்போதைய நிலை**

- அரிசி மற்றும் காய்கறிகளை கடையில் வாங்குகிறார்கள்
- தற்போது மழை சரிவர பெய்யாததால் விவசாயம் செய்வதில்லை
- கிராமத்தில் பெரும்பாலோர் காடுகளுக்கு செல்கிறார்கள்
- அவர்கள் உள்ள பகுதி வனத்துறைக்கு உட்பட்ட பாதுகாப்பான பகுதி என்பாதால் அவர்களால் காடுகளுக்குள் செல்ல முடிவதில்லை
- துணிகளை துவைப்பதற்கு அருகில் உள்ள ஆறுகளுக்கு செல்கிறார்கள்
- கிராமத்தில் குடிநீர் மற்றும் தண்ணீர் பற்றாக்குறை உள்ளது

- குடிநீர் காசு கொடுத்துதான் வாங்குகிறார்கள்
- இவர்கள் பொங்கள் போன்ற திருவிழாக்களை கொண்டாடுகின்றனர்
- நுரை கிழங்கு, மரவல்லி கிழங்கு, பூலை கிழங்குகள் கிடைக்கின்றன.
- பேதுமான மழை பெய்து 3 ஆண்டு ஆகிறது
- பள்ளியானது அவர்களது கிராமத்திலிருந்து 7 கி.மீட்டர் தொலைவில் உள்ளது
- போக்குவரத்து வசதிகள் கிடையாது
- ஊரில் யாரும் பிளாஸ்டிக் பைகளை பயன்படுத்துவது கிடையாது
- தானிய வகைகள் எதுவும் தற்போது கிடைப்பது இல்லை
- மூலிகையில் கடுக்காய் கிடைக்கிறது
- தேன் கிடைப்பது அரிதாகி போனது

**முந்தைய காலத்தில்**

- மூங்கில் குறுத்து (மூங்கில் அரிசி) உணவாக உட்கொண்டனர்
- காடுகளுக்கு சென்று அங்கு கிடைக்கும் பொருட்களை உணவுக்கும் வியாபரத்திற்கும் பயன்படுத்திவந்தனர்
- அதிகமான மூலிகைகளை காடுகழில் சேகரித்து வந்துள்ளனர்
- கம்பு, சோளம், பீன்ஸ், கத்தரிக்காய் போன்றவற்றை விவசாயம் செய்து வந்தனர்.

- தேன் சேகரித்து எடுத்து வந்தனர். அதை மருந்தாவும் அதிகபடியான தேனை வியாபாரம் செய்தனர்
- கல்வி அறிவு கிடையாது
- அதிகமான சந்தன மரங்கள் காணப்பட்டது
- கடுக்காய், பூச்சக்காய், மரப்பாசம், நெல்லி, மரத்தேன், மூங்கில், புளி ஆகியவை அதிகமாக கிடைத்தன

மேற்கண்ட தகவல்கள் இந்த ஆய்வில் கிடைத்தன. இதன் மூலம் காடுகளின் அனவு குறைந்து போனது, அவர்களது வாழ்வாதாரமான காடுகளிலிருந்து கிடைத்து வந்த தேன், மூலிகைகள், உணவு பொருட்கள் தற்போது கிடைக்காமல் போனதோடு அவைகள் மெல்லமெல்ல மறையத் தொடங்கியதையும் அறிய முடிந்தது. அரசு கொள்கையாள் பாதுகாப்பட்ட வனப்பகுதியாக மாறியதால் அவர்களது பாரம்பரிய வாழ்வாதாரங்கள் கிடைக்காமலும், விவசாயத்தை மறந்து அன்றாட உணவுக்கான பொருட்கள் அரிசி, காய்கறிகளை காசு கொடுத்து கடையில் வாங்கும் நிலைக்கு தள்ளபட்டுள்ளதை நன்கு உணர முடிந்தது. மேலும் அவர்களது பாரம்பரிய தொழில்களான காடுகளிலிருந்து தேன் சேகரித்தல், மூலிகைகளை சேகரித்தல், கிழங்குகள் எடுத்தல், விவசாயம் செய்தல் போன்ற வாழ்க்கையும், வாழ்வாதாரமும் மறைந்து தினகூலி வேலைக்கு செல்லும் அவலமான சூழல் உருவாகி உள்ளதை கண்கூடாக காணமுடிந்தது.

**தெப்பகாடு**

இரண்டாவது குழந்தைகள் குழுவனது தெப்பகாடு கிரமத்திற்கு சென்றது. அந்த குழுவை திரு. ஸ்டீபன் மற்றும் திரு. மாணிக்கம் வழி நடத்தினர். அங்கு குழந்தைகளுக்கு சிறப்பான வரவேற்ப்பு கொடுக்கப்பட்டது. ஊஆஊது குழந்தைகளுடன் அந்த கிரம குழந்தைகளும் கலந்து அமர்ந்தனர். திரு. ஸ்டீபன் அவர்கள் கிராம மக்களுக்க குழந்தைகளையும் ஊழியாகளையும் அறிமுகம் செய்து வைத்தார். அவர் அறிமுகம் படுத்தும்போது இந்த குழந்தைகள் பட்டாசு தொழில் நிறைந்த, அதிக வெயில் உள்ள பகுதியிலிருந்து வந்திருப்பதாக கூறினார். மேலும் ஊஆஊது பற்றி அவர்களிடம் 13 முதல் 18 வயதுடைய குழந்தைகளால் நடத்தப்படும் இயக்கம் என்றும் சுற்றுசூழல் பாதுகாப்பிற்காகவும், தட்பவெப்ப மாறுதலை மட்டுபடுத்துவதாற்கும், குழந்தைகளுக்கு சுற்றுச்சூழல் கிடைப்பதற்கா ஆரம்பிக்கப்பட்ட இயக்ம் என்று கூறினார்.

மேலும் இந்த இயக்கமானது சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த பல்வேறு விழிப்புணர்வு பிரச்சாரங்களை மேற் கொண்டு வருவதையும், 2012 ஆம் ஆண்டு மே மாதம் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு யாத்திரையை கன்னியகுமரியிலிருந்து சென்னை வரை சென்றதையும் கூறினார்.

பிறகு குழந்தைகள் தங்களை சுய அறிமுகமும், அதேபோல் கிராம மக்கள் அவர்களுடைய சுய அறிமுகத்தையும் செய்துக் கொண்டாகள். அதன் பின் சுயு முறைப்படி ஆய்வுக்கான கேள்விகள் கலந்தாய்வு முறையில் கேட்கப்பட்டு. தயவல்கள் பெறப்பட்டது. ஆய்வில் உணவு, மருந்து, வியாபாரம், விவசாயம், பொது என்ற ஐந்து வகையாக பிரித்து அதன் அடிப்படையில் தயகவல் சேகரிக்கப்பட்டன. அவை

**முந்தைய காலத்தில்**

- விவசாயம் செய்து வந்தனர்.
- காடுகளில் மரங்களை நட்டு அதை வளர்த்து வந்தனர்
- வாழை, ராகி,கிழங்கு வகைகள், கீரை வகைகளை பயிர் செய்து வந்தனர்
- விவசாயத்தின் போது இரவு நேரங்களில் காடுகளில் வீடு கட்டி தங்கி காவல் காத்து வந்தனர்
- காடுகள் மற்றும் விவசாயத்திலிருந்து கிடைத்த பொருட்களை தேவைக்கு போக மீதமுள்ளவைகளை கூடலூர் சந்தையில் வியாபாரம் செய்த வந்தனர்
- காட்டிலிருந்து கிடைத்த மூங்கில் கொண்டு வீடுகளை கட்டினர்
- காட்டில் கிடைக்கும் புற்களை கொண்டு வீட்டுக்கு கூரை மேய்ந்திருந்தனர்
- காட்டில் கிடைக்கும் நெல்லிகாய்களை ஊறுகாய் போட்டு வியாபாரம் செய்த வந்தனர்
- காட்டில் கிடைக்கும் மூலிகைகளை அதாவது ஜாதிகாய், கடுக்காய், வசம்பு (இதை தண்ணீரில் கலந்து தெளித்தால் பாம்பு வராது என் நன்பிக்கை உள்ளது) மருந்தாகவும் வியாபாரப் பொருளாகவும் பயன்படுத்தி வந்தனர்

- காடுகளில் நாவற்பழம், பூவத்தி பழம், ஆரஞ்சு பழம், வாழைப்பழம், சீத்தாப்பழம், கொய்யா, பப்பாளி, பலாப்பழம் போன்ற பழங்கள் கிடைத்து வந்தன
- நூர் கிழங்கு, எர்த் கிழங்கு, நீல் கிழங்கு, தழுப்பு கிழங்கு என நான்கு வகையான கிழங்குகள் காட்டில் கிடைத்து வந்தன
- தேன் எடுப்பது குலத்தொழிலாக இருந்து வந்தது. அதை மருந்தாகவும் வியாபாரப் பொருளாகவும் பயன்படுத்தி வந்துள்ளனர்
- 1988 ஆம் ஆண்டு அரசாங்கம் மூலம் 2 மாடுகள், 1 கன்று வழங்கப்பட்டது. வீடுகளில் கோழி, வாத்து வளர்த்துவந்தனர். மாட்டிலிருந்து கிடைத்த பால், தயிர் ஆகியவற்றை உணவாகவும், விற்பனையும் செய்தனர். கோழி, வாத்துகளை உணவாக பயன்படுத்தினர்.

**தற்போதைய நிலை**

- காடுகள் அரசாங்க பாதுகாக்கப்பட்ட இடமாக மாறிவிட்டதால் விவசாயம் இல்லை
- உணவு பொருட்கள் உட்பட அனைத்து பொருட்களையும் கடையில் வாங்கி வருகிறார்கள்
- தேன் கிடைப்பது இல்லை. மருந்து தேவைப்பட்டால் கூட காசு கொடுத்துதான் வாங்குகிறர்கள்
- கிழங்கு வகைகள் அழிந்து விட்டன
- மூலிகைகள் கிடைப்பது அரிதாகி போனது. மேலும் பாரம்பரிய மூலிகை வைத்திய முறை மறைந்து அனைவரும் மருத்துவமனைக்கே செல்கின்றனர்
- உணவுப் பொருட்கள் அரிசி, பருப்பு போன்றவற்றை ரேசன் கடைகளிலேயே வாங்குகிறார்கள்
- ராகி, கொள்ளு போன்ற உணவு பயிர்கள் கிடைப்பதில்லை, கடையில்தான் வாங்குகிறர்கள்

- 6 மாதம் மழையும், 6 மாதம் வெயிலும் இருந்த காலம் மாறி 9 மாதம் வெயிலும், 3 மாதம் மழையும் பெய்கிறது
- வனத்துறை கால்நடை வளர்ப்பிற்கு தடை செய்துள்ளது. மாடு வளர்க்க வேண்டுமானால் அதை வீட்டில் கட்டி போட்டுதான் வளர்க்க வேண்டும்.

மேலும் கிடைத்த தகவல் மிகவம் ஆச்சரித்தை கொடுத்தது. முன்பு காடுகளில் கிழங்குகளை எடுக்கும் போது அதன் கிளைகளை நாலாபுறமும் ஊன்றி வைத்துவிட்டு வருவார்கள். அதனால் மேலும் மேலும்  கிழங்குகள் பெருகி எப்பொழுதும் கிடைத்து வந்தது. ஆனால் வனத்துறை கட்டுபட்டிற்கு வந்த பிறகு அந்த கிழங்குவகைகள் சிறிதுசிறிதாக மறைய தொடங்கிவிட்டது. அரசாங்க கட்டிடம் இங்கு இல்லை ஆனால் ஒரு பால்வாடி மட்டும் உள்ளது. அரசாங்கம் கட்டிடம் கட்டிக் கொள்ள வாய்ப்பளித்தாலும் வனத்துறை அனுமதி வழங்க மறுக்கிறது. அரசாங்கம் குடிநீர் மற்றும் இலவச மின்சாரம் கொடுத்துள்ளது. தொண்டு நிறுவனங்கள் மூலம் குழந்தைகள் ஆதார மையம் நடக்கிறது. வீட்டில் வளர்க்கும் மாடுகள் தெரியாமல் காட்டிற்குள் சென்று விட்டால் வனத்தறை பிடித்து சென்றுவிடுவார்கள்.

கல்வி என்பது முன்பு இல்லை. பள்ளிகளும் இல்லை, போக்குவரத்து வசதியும் கிடையாது. ஆனால் தற்போது குழந்தைகள் பள்ளிக்கு செல்கிறார்கள். அதில் 6 குழந்தைகள் ஆங்கில வழி கற்கிறார்கள். இந்த கிராமத்தில் முதல் முதலாக ஒரு பெண் குழந்தை கல்லூாயில் படித்து வருகிறார். 2013 ஆண்டு  பிளஸ் 2 தேர்வில் 2 குழந்தைகள் தேர்வாகி உள்ளனர்.

அந்த கிராம குழந்தைகள் அவர்களது பாரம்பரிய பாடல்களை பாடியும், டான்சும் ஆடினார்கள். அந்த குழந்தைகள், ஊஆஊது குழந்தைகளை அவர்களது வீடுகளுக்கு கூட்டி சென்று மலர்களை கொடுத்தனர். மேலும் அந்த குழந்தைகளுடன் நம் குழந்தைகளும் புகைப்படங்களை எடுத்துக் கொண்டனர்.

02

# நான்காம் நாள்

## 24.05.2013

22.05.2013 அன்று காலை 6.30 மணிக்கு பயணம் ஆரம்பமானது. திருச்சுழியிலிருந்து கிளம்பிய குழந்தைகளுக்கு காலை உணவு வாடிப்பட்டி அருகில் வழங்கப்பட்டது. அதன்பின் தொடர்ந்த பயணம் மதியம் 1.00 மணியளவில் மேட்டுப்பாளையம் வந்ததைடைந்து. அங்கு குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது. பிறகு அங்கிருந்து ஆய்வு பயணமானது தொடங்கியது. மாலை 4.30 மணியளவில் RCPDS CMCJ குழந்தைகள் கோத்தகிரியில் உள்ள ஐ லேண்ட் டிரஸ்ட் சென்றடைந்தனர். அன்று மாலையே குழந்தைகளுக்கு ஒரு விளக்க கூட்டம் நடைபெற்றது. கூட்டம் முடிந்ததும் குழந்தைகளுக்கு இரவு உணவு அளிக்கப்பட்டது.

22.05.2013 காலை 6.30 மணியளவிற்கு குழந்தைகள் அனைவரும் ஊட்டிக்கு பயணமானார்கள். மாலை 4.30 மணிக்கு மேட்டுபாளைத்தை அடைந்தனர். பிறகு அங்கிருந்து கிளம்பிய பயணமானது இரவு 9.00 அளவிற்கு தேவாலா என்ற கிராமத்திற்கு சென்றடைந்தது. அங்கு இரவு குழந்தைகள் தங்கினார்கள்.

22.05.2013 காலை 6.30 மணியளவிற்கு குழந்தைகள் அனைவரும் ஊட்டிக்கு பயணமானார்கள். மாலை 4.30 மணிக்கு மேட்டுபாளைத்தை அடைந்தனர். பிறகு அங்கிருந்து கிளம்பிய பயணமானது இரவு 9.00 அளவிற்கு தேவாலா என்ற கிராமத்திற்கு சென்றடைந்தது. அங்கு இரவு குழந்தைகள் தங்கினார்கள்.